பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 05 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிப்பதற்கான காலவரம்பு குறித்து குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உச்சநீதிமன்றத்தின் கருத்தை கோரியுள்ளார்.
- தீவிரவாதிகளை முழுமையாக ஒழிக்கும்வரை நடவடிக்கைகள் தொடரும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- பாகிஸ்தான் பொருட்களை விற்பனை செய்வது குறித்து விளக்கமளிக்குமாறு ஆன்லைன் வணிக நிறுவனங்களுக்கு மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
- தமிழகத்தின் உதகையில், மலர் கண்காட்சியை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்
- ஸ்லோவேக்கியா சர்வதேச மகளிர டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Prarthana Thombare –** நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிப்பதற்கான காலவரம்பு குறித்து குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உச்சநீதிமன்றத்தின் கருத்தை கோரியுள்ளார்.

சட்டப்பேரவைகளால் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க, அரசியல் சாசனத்தில் காலவரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படாத நிலையில், நீதிமன்றங்களால் காலவரம்பு நிர்ணயம் செய்ய முடியுமா என்பது குறித்து, அவர் விளக்கம் கோரியுள்ளார்.

அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின் அடிப்படையில் அனுப்பப்படும் மசோதாக்கள் மீது அமைச்சரவையின் ஆலோசனையின் அடிப்படையில் தான் ஆளுநர் செயல்பட வேண்டுமா என்பதற்கான அரசியல் சாசன பிரிவுகளை ஆராய்ந்து கருத்து தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், 201-வது பிரிவின் கீழ், விருப்புரிமை அடிப்படையில் முடிவெடுக்க குடியரசுத் தலைவருக்கும் காலநிர்ணயம் ஏதும் செய்யப்படாத நிலையில், நீதிமன்ற உத்தரவுகள் மூலம் காலவரம்பு நிர்ணயம் செய்ய

முடியுமா என்பது குறித்தும் விளக்கமளிக்குமாறு குடியரசுத்தலைவர், உச்சநீதிமன்றத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் ஆளுநர் நிறுத்தி வைத்ததை எதிர்த்து, மாநில அரசு தொடர்ந்த வழக்கில், உச்சநீதிமன்றத்திற்கான பிரத்யேக அதிகாரத்தின் அடிப்படையில் அந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்ததாக கருதலாம் என்று கடந்த மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், குடியரசுத்தலைவர் தற்போது அதுகுறித்து விளக்கம் கோரியுள்ளார்.

>>>>><<<<<

எல்லை பாதுகாப்பு நிலவரம் குறித்து ஸ்ரீநகரில் பாதுகாப்புப் படை உயரதிகாரிகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆய்வு மேற்கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, ஜம்மு காஷ்மீரின் தற்போதைய நிலவரம் குறித்து அவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அங்குள்ள வீரர்களிடையே உரையாற்றிய அவர், ஆப்பரேஷன் சிந்தூர் என்பது நடவடிக்கையின் பெயர் மட்டுமல்ல, நாட்டின் உறுதிப்பாடு என்று குறிப்பிட்டார்.

தேவைப்படும் போது எத்தகைய கடினமான முடிவுகளையும் இந்தியா எடுக்கும் என்பது இதன்மூலம் உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நடவடிக்கை ஒவ்வொரு வீரரின் கனவாக இருந்தது என்று குறிப்பிட்ட அமைச்சர், எதிரிகளையும், அவர்களது முகாம்களையும் இந்தியா முழுமையாக அழிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, ஜம்மு காஷ்மீரில் **Dagger** படைப்பிரிவை பார்வையிட்டு, அங்கு பணியாற்றும் வீரர்களுடன் கலந்துரையாடினார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, துணிச்சலோடும், விழிப்புடனும் பணியாற்றிய வீரர்களுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

வருங்காலங்களில் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள ராணுவத்தினர் தயாராக இருக்குமாறும் ஜென்ரல் உபேந்திர துவிவேதி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பாதுகாப்புப் படைகள் திறம்பட செயலாற்றியதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டு மக்கள் சார்பாக, பாதுகாப்புப் படையினருக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு, நாட்டின் பாதுகாப்பில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் துருக்கி அரசு, பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதை அடுத்து, அந்நாட்டு பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் நிறுத்தி வைத்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு சூழலை கருத்தில் கொண்டு, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்த பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பாகிஸ்தான் கொடிகள் மற்றும் அந்நாட்டு பொருட்களை விற்பனை செய்தது தொடர்பாக விளக்கமளிக்குமாறு, அமேஸான், ஃபிலிப்கார்ட் உள்ளிட்ட ஆன்லைன் வர்த்தக நிறுவனங்களுக்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆன்லைன் வணிக நிறுவனங்களின் இதுபோன்ற பொறுப்பற்ற செயலை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பொருட்களை தங்களது விற்பனை பட்டியலிலிருந்து அகற்றுவதோடு, இந்தியாவின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவது அவசியம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் உதகையில், கோடை விழாவை ஒட்டி நடைபெறும் மலர் கண்காட்சியை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெறும் இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ள மலர் அலங்காரங்களை பார்வையிட்ட முதலமைச்சர், அங்கு நடைபெற்ற பழங்குடியினரின் கலாச்சார நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தார்.

மேலும், அந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளையும் அவர் பார்வையிட்டார்.

வழக்கமாக ஐந்து நாட்கள் நடைபெறும் மலர் கண்காட்சி இம்முறை 11 நாட்கள் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம், சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் தங்களது நில உடமை ஆவணங்களை பதிவு செய்ய இம்மாதம் இறுதிவரை சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - முருகன் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்ததே இதற்கு காரணம் என்று தெரிவித்தார்.

குற்றச்சம்பவங்களை தடுக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் பெண்களுக்கு நீதி கிடைத்திருப்பது வரவேற்கத்தக்கது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் பேருந்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

பீகாரிலிருந்து தில்லி நோக்கி சென்று கொண்டிருந்த படுக்கை வசதி கொண்ட இந்த பேருந்து, லக்னோவின் கிஷான்பாத் அருகே சென்று கொண்டிருந்த போது, திடீரென தீப்பற்றியது.

விபத்து நடந்த போது, பேருந்தின் அவசரக் கதவு திறக்காததால், பயணிகள் தப்பிச் செல்ல வழியின்றி சிக்கிக் கொண்டதாக லக்னோ காவல்துறை துணை ஆணையர் திரு. **Nipun Aggarwal** தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, உத்ராகண்ட், மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் வரும் 17ஆம் தேதிவரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர் மாநிலங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் அடுத்த 2 நாட்களுக்கு மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Prarthana Thombare –** நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்லோவேக்கியாவின் **Dominika - Katarina** இணையை வென்றது.

**>>>>><<<<<**

ஈரானின் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prajwal Dev – Nitin Kumar Sinha** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ஈரானின் **Airik – Kiarash** இணையை வென்றது.

**>>>>><<<<<**

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் ஏழாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா முதலிடத்தில் நீடிக்கிறார்.

7வதுசுற்று முடிவில் அவர் 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**>>>>><<<<<**

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் இன்று மாலை நிறைவு பெறுகிறது.

இன்று நடைபெற்ற ஆடவர் கூடைப்பந்து போட்டியில் தில்லி அணியை வென்று, தமிழக அணி வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

**>>>>>END<<<<<**